# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අதி விசேஷமானது

අංක 1640/16 - 2010 පෙබරවාරි 09 වැනි අඟහරුවාදා - 2010.02.09

*1640/16 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

எனது இல. சிஏ/1/2/3

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதியினாலான பிரகடனம்

(முத்திரை)

மஹிந்த ராஜபக்ஷ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இப்பிரகடனத்தின் மூலம் -

(அ). இன்று நள்ளிரவிலிருந்து பாராளுமன்றத்தைக் கலைத்து, இரண்டாயிரத்துபத்தாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் இருபத்திரெண்டாம் நாளன்று புதிய பாராளுமன்றமொன்றைக் கூடுமாறு அழைக்கின்றேன் ;

(ஆ). இரண்டாயிரத்துபத்தாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் எட்டாம் நாளை பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கான திகதியாக நிருணயிக்கின்றேன் ;

(இ). இரண்டாயிரத்துபத்தாம் ஆண்டு பெப்புருவரி மாதம் பத்தொன்பதாம் நாளன்று தொடங்கி, இரண்டாயிரத்துபத்தாம் ஆண்டு பெப்புருவரி மாதம் இருபத்தாறாம் நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணியுடன் முடிவடையும் காலப்பகுதியை பெயர்குறித்த நியமனக் காலப்பகுதியாகக் குறித்துரைக்கின்றேன். அக்காலப்பகுதிக்குள் பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ). இதற்கான அட்டவணையின் 1 ஆம் நிரையில் குறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வோர் இடத்தையும், அவ்வட்டவணையின், 11 ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறிக்கப்பட்டிருக்கும் தேர்தல் மாவட்டத்துத் தேர்தலில் நிற்க விழையும் வேட்பாளர்களின் பெயர்குறித்த நியமன இடமாகக் குறித்துரைக்கின்றேன்

என்பதைச் சகலரும் அறிவீராக.

இரண்டாயிரத்துபத்தாம் ஆண்டு பெப்புருவரி மாதம் ஒன்பதாம் நாளன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| தேர்தல் மாவட்டம் | பெயர் நியமன இடம் |
| இல. 01 - கொழும்பு | மாவட்டச் செயலாளர் அலுவலகம், கொழும்பு |
| இல. 02 - கம்பஹா | மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| இல. 03 - களுத்துறை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |
| இல. 04 - கண்டி | மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| இல. 05 - மாத்தளை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தளை |
| இல. 06 - நுவரெலியா | மாவட்டச் செயலாளர் அலுவலகம், நுவரெலியா |
| இல. 07 - காலி | மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |
| இல. 08 - மாத்தறை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| இல. 09 - அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், அம்பாந்தோட்டை |
| இல. 10 - யாழ்ப்பாணம் | அரசாங்க அதிபர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| இல. 11 - வன்னி | அரசாங்க அதிபர் அலுவலகம், வவுனியா |
| இல. 12 - மட்டக்களப்பு | அரசாங்க அதிபர் அலுவலகம், மட்டக்களப்பு |
| இல. 13 - திகாமடுல்ல | அரசாங்க அதிபர் அலுவலகம், அம்பாறை |
| இல. 14 - திருகோணமலை | அரசாங்க அதிபர் அலுவலகம், திருகோணமலை |
| இல. 15 - குருநாகல் | மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல் |
| இல. 16 - புத்தளம் | மாவட்டச் செயலாளர் அலுவலகம், புத்தளம் |
| இல. 17 - அநுராதபுரம் | மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |
| இல. 18 - பொலன்னறுவை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், பொலன்னறுவை |
| இல. 19 - பதுளை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |
| இல. 20 - மொனறாகலை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், மொனறாகலை |
| இல. 21 - இரத்தினபுரி | மாவட்டச் செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி |
| இல. 22 - கேகாலை | மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.